ஜெபத்தின் மூலம் கேட்கவும். "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு நம்முடைய நோய்களைச் (சிலுவையில்) சுமந்தார்" (மத்தேயு 8 : 17).

நீங்கள் தெய்வ பிள்ளைகளாய் மாறுவீர்களானால், "ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" (பிலிப்பியர் 4:6,7).

எழுதியவர் – சாமுவேல் தானியேல்

மேலும் விவரங்களுக்கும் ஜெப உதவிக்கும்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

"Freedom from worry" Tamil Tract No 161

விசுவாச ஜெபக்கைப்பிரதிக் கழகம்

தபால் பெட்டி எண் 1010, சென்னை 600010

PRINTED AT FAITH PRESS CHENNAI 10 - C-200 000 JUNE - 2005



# கவலை வேண்டாம்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு11:28) என்றும். "உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போட மாட்டான்" (யோவான் 16: 22) என்றும் இயேசு கூறுகிறார்.

கிறிஸ்துவில் சமாதானம் உண்டு. என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன் (யோவான் 14:27) கிறிஸ்துவில் சகல ஆறுதலும் உண்டு. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவான் 14:27)

கிறிஸ்துவுடன் நித்திய ஜீவன் உண்டு. குமாரனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாய் இருக்கிறான்.

ஒருவர் விரும்பினால் இயேசுகிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சுகமாக வாழலாம்.

சாமுவேல் தானியேல்

Jesus Family Ministry
KUNIGAL-572 130

மேலும் விவரங்களுக்கும் ஜெப உதவிக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

"Where is happiness?" Tamil Tract No.136
விசுவாச ஜெபக் கைப்பிரதிக் கழகம்
தபால் பெட்டி எண் 1010, சென்னை 600010

PRINTED AT FAITH PRESS CHENNAI 10 C-200 000 JUNE - 2006

டத்து ஏதேன் என்னும் அழகான நந்தவனத்தில் வைத்தார். ஆனால் அவர்களோ தேவனுக்குக் கீழ்படியாமல் மனித வர்க்கத்தையே பாழாக்கிப் போடும் பாவநிலைக்குள்ளாகிக் கொண்டு வந்து விட்டனர். ஆகவே அவர்கள் பாவங்களை மன்னித்து அவர்களைக் கரையேற்ற இறைமைந்தன் இயேசு மானிடனாய் இவ்வுலகினில் அவதரித்து முப்பத்து மூன்றரை ஆண்டுகள் பாவமற்ற தூய வாழ்க்கையினையாற்றி, மக்களுக்குப் பிசாசின் பிடியிலிருந்து வெற்றியையும், பாவத்தின் மேலும் பாதகத்தின் மேலும் வெற்றி சிறக்கும்படியும், பாவங்களிலிருந்து பூரண விடுதலையும் அளிக்கும்படித் தம்மையே தியாகப் பலியாகச் சிலுவையில் தந்து மரித்து உயிர்த்தெழுந்து இன்றும் தங்கள் பாவங்களை உணர்ந்து அவரிடம் அறிக்கையிடும் யாவர்க்கும் பாவமன்னிப்பளித்து தூய வாழ்க்கையாற்ற அருள்புரிந்து முடிவில் நித்தியானந்த மோட்ச பாக்கியத்தினையும் அருள அவர் வல்லமையுள்ள இரட்சகராய் ஜீவிக்கின்றார். நீர் இவ்விதம் விசுவாசித்து பாவமன்னிப்பையும் இரட்சண்ய சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்வீராயின் எமது முகவரிக்கு எழுதவும்.

எழுதியவர்: சாமுவேல் தானியேல்

"Monkey's Conference" Tamil Tract No.251

**விசுவாச ஜெபக்கைப்பிரதிக் கழகம்**

தபால் பெட்டி எண்1010 சென்னை 600010

**இயேசு சீக்கிரம் வருகிறார்**

PRINTED AT FAITH PRESS, CHENNAI-10.C-2.00,000 MAY - 2005

# குரங்குகளின் மாநாடு



வயது முதிர்ந்த குரங்கொன்று ஒரு பெரிய மரத்தின் அடியில் ர்ந்து கொண்டு மிகவும் படப்படப்புடன் மற்றக் குரங்குகளை அழைத்து ரு மாநாடு நடத்திற்று. அம்மாநாட்டில் வயதான குரங்கு பேசத் தாடங்கியது, திடுக்கிடும் தகவல் ஒன்றினை மானிடர்கள் பேசக் கட்டேன். கேவலமான செய்கைகளில் ஈடுபட்டிருக்கும் மானிடர்கள், ரிய சிறந்த நமது இனத்திலிருந்து தோன்றியவர்கள் என்று சால்லுகின்றார்கள். இது உண்மையாக இருக்காது என்பது திண்ணம். வ்விதம் சொல்வது நமது இனத்திற்கு மிகவும் கேவலமானது.

எந்தக் குரங்காவது தனது மனைவியைத் தவிக்க விட்டு விட்டு, வசித்தனத்தில் ஈடுப்பட்டுள்ளதா? நமது இனத்தில் யாராகிலும் நன்றாக டித்து விட்டு மனைவி பிள்ளைகளைப் பட்டினி போட்டிருக்கிறோமா? ன் இன்பம் பெரிதாக எண்ணி சுயநலவாதிகளாய் மற்றவர்க்குத் ங்கிழைப்பவர் நம்மில் யாரும் கிடையாதே. எந்தத் தாய்க் குரங்காவது னது சொந்தப் பிள்ளைகளைப் பேணி கவனியாமல் மற்றவர்களிடம் ிட்டுவிட்டு ஊர் சுற்றுகின்றதா?

நமது இனத்தில் எந்தக் குரங்காவது தான் வசிக்கும் இடத்தைச் ற்றி வேலியடைத்து மற்றக் குரங்குகளை வரவிடாமல் தடுக்கின்றனவா? ாம் எவ்வளவு ஒற்றுமையுடன் ஐக்கியமாய் வாழ்ந்து வருகின்றோம். ழத்தோட்டங்களை நாம் காணும்போது ஒருவர் மட்டும் போய் அதை ண்கிறோமா? கூட்டமாய் நாம் அனைவரும் போய் பழங்களை ண்கிறோமே. கூட்டுறவு சங்கங்கள் என இம்மானிடர் ஏற்படுத்திக் காண்டு அதில் நான் பெரியவன், நீ பெரியவன் என்ற போட்டியும், பாறாமையும் கொள்கின்றனர். மேலும் அதில் வரும் வருமானங்களில் ழல் கணங்குகளைக் காட்டிப் பணத்தைக் கொள்ளையாடுவதோடின்றி ஞ்சமும் வாங்குகிறார்களல்லவா.

மானிடர்களில் ரவுடியும், போக்கிரியுமானவர்கள் இராக்காலங்களில் கைத் துப்பாக்கிகளையோ, அல்லது கூரிய கத்திகளையோ அல் குண்டாந்தடிகளையோ வைத்துக் கொண்டு தங்கள் இனத்தவர்களா மானிடர்களையே தாக்கி, பணங்களைக் கொள்ளையாடி அழிக்கின்றனர். நமது குரங்கினத்தில் எவரேனும் இப்படிப் பட்ட கீழ்த்தரமான செயல்களைச் செய்வதுண்டா? எந்தக் குரங்காகிலும் குரங்குகள் நடமாட்டம் மிகுந்த இடங்களில் குண்டுகளை வெடித்து நம் இனத்தவருக்கு உயிர்ச் சேதத்தை உண்டு பண்ணுவதோ அல்லது கொலைக் கொள்ளை ஆகிய பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு நமது இனத்தவரை அழித்ததுண்டோ? இவைகளைச் சற்றே சிந்தித்துப் பார்ப்போமாகில் மானிடர்கள் குரங்கிலிருந்து வந்தவர்களல்ல என்பது நிச்சயமாய்த் தெரிகிறது. ஆகவே மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன் அல்ல என்ற தீர்மானத்தை நாம் எடுத்த மானிடருக்கெதிராய் நாம் நிறைவேற்றுவோம் என்று கூறி முடித்ததும், வாலிப வயதுடைய குரங்குகள் ஏகமனதாக ஒரே குரலில் மானிடர்கள் இத்தீர்மானத்தை அங்கீகரிக்கவில்லையாயின் நாம் அனைவரும் போராட்டம் நடத்துவோம் என்று கூறின. தலைமை தாங்கிய வயதான குரங்கு நாம் போராட்டம் நடத்தினால், இக்கொடிய மானிடர்கள் நம்மையும் அழித்துக் கொன்று விடுவார்கள். ஆகவே நாம் அமைதியாயிருப்போம். அவர்களே ஒருவரோடொருவர் சண்டையிட்டு, ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு அவர்களாகவே மடிந்து அழிந்து போவார்கள் என்று கூறிற்று.

மாநாட்டில் கலந்து கொள்ள வந்து இருந்த குரங்குகளில் சற்று வயது முதிர்ந்த பெரியகுரங்கு நன்றியுரையாற்றி மாநாட்டை முடித்தது.

மானிடர்களாகிய நம்மைப்பற்றி குரங்குகள் என்ன நினைக்கிறது என்று சற்றே எண்ணிப்பாருங்கள். எல்லாவிதமான ஈனச் செய்கைகளுக்கும் காரணம் பாவந்தான். மானிடரைத் தேவன் தமது சாயலாக சிருஷ்டித்து உலகில் அனைத்தையும் அவர்களுக்காகவே

# உண்மைச் சந்தோஷம் எங்கே?

## செல்வத்தில் அல்ல

ஜேகவுல்டு என்றும் இலட்சாதிபதிப் பிரபு திரண்ட செல்வம் உடையவராய் இருந்தும், அவர் மரிக்கும்போது, நான் தான் உலகிலேயே மிகுந்த நிர்பாக்கியமுள்ள மனிதன் என்று உரைத்தார்.

மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு 8:36) என்று சத்தியவேதம் கூறுகிறது.

## சிற்றின்பத்திலும் அல்ல

பைரன் பிரபு தன் வாழ்வில் சிற்றின்பத்தில் உழன்று கிடந்தவன். அவன் ஒருநாள், என்னைத் தின்னப் புழுக்கள் காத்திருக்கின்றன. வியாதியும் துக்கமும் என்னுடையவைகளே என்று எழுதி வைத்தான்.

பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் (ரோமர் 6:23) என்று பரிசுத்த வேதாகமம் வெளிப்படுத்துகிறது.

## போர்ப்புகழ் பெறுவதிலும் அன்று

கண்கண்ட இடமெல்லாம் போரிட்டு பிடித்தான் மகா அலெச்சாந்தர் அரசன். ஆயினும் முடிவில், போரிட்டுப் பிடிக்க வேறு இடமில்லையே, என்று அழுதானாம்.

சிறைப்படுத்திக் கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப் போவான் பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்பட வேண்டும். (வெளி 13:10) என்று திருமறை எச்சரிக்கிறது.

## பெரும் அரசியல் பதவி வகிப்பதிலும் அன்று

நியூயார்க் பட்டணத்தின் ஆளுநராய் இருந்து ஆட்டிப்படைத்த வில்லியதுவீடு என்பவர், என் வாழ்வு எத்துறையும் தோல்வியுற்ற சோக வாழ்வே என முறையிட்டார்.

"இப்பொழுதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே எச்சரிகையாயிருங்கள். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூறுங்கள். குமாரன் கோபங்கொள்ளாமலும் நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படி அவரை முத்தஞ்செய்யுங்கள். அவரை அண்டிக் கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" (சங்கீதம் 2:10–12) என்று வேதப் புத்தகத்தில் காணலாம்.

## நாத்திகத்திலும் அன்று

கடவுள் இல்லை என்று சாதித்த நாத்திகர்களுள் தலைசிறந்தவர் வால்டார் என்பவர். ஆயினும் இவர் நான் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணுகிறேன் என்று பரிதவிக்கும் வண்ணம் பதறினார்.

"சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" (எபி.3:12) என்று நாத்திகர்களைத் தேவன் எச்சரிக்கின்றார்.

## உயர் உத்தியோகத்திலும் பெரும் புகழிலும் அன்று

பேக்கன்பீல்டு என்னும் பிரபு இவ்விரண்டையும் அனுபவித்தவர் ஆயினும் அவர், வாலிப வாழ்வு குற்றம் பொதிந்தது, மானிட வாழ்வோ போராட்ட வாழ்வு, வயோதிக வயதோ சோக வாழ்வு, என்று எழுதி வைத்தார்.

"நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை, தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராதற்கு முன்னும் அவரை ஏற்றுக் கொள்" (பிரசங்கி 12:1) என்று சத்திய வேதத்தில் காண்கிறோம்.

## அப்படியானால் உண்மைச் சந்தோஷம் எங்கே கிட்டும்?

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் உண்மைச் சந்தோஷம் கிட்டும்.

இயேசு சீக்கிரம் வருகிறார்

ஒன்றிற்கும் கவலைப்படவேண்டாம். எல்லாம் சீக்கிரத்தில் சரியாகிவிடும் என்று மற்றவருக்கு அறிவுரைத் கூறுவதை அடிக்கடி கேட்டிருக்கின்றோம். இவ்விதம் இலகுவாய்க் கூறுபவர்களுடைய வாழ்க்கையில் பலவித கவலைக்களுக்குரிய சம்பவங்கள் நிகழுமேயாயின், அவர்களும் கவலைக்குள்ளாகின்றனர்.

சிறியோர் முதல் பெரியோர் வரை வாழ்க்கையில் ஏதாகிலும் கவலை கொண்டு, பின்வேதனைக் குள்ளாகின்றனர். பள்ளியில் பயிலும் பல சிறுவர்கள் தேர்வு காலங்களில், தேர்ச்சி பெறுவோமோவெனக் கவலைப்படுகின்றனர். குடிப்பழக்கத்தினால் சம்பாத்தியத்தை வீண்விரயம் செய்யும் கணவனைக் கொண்டு எப்படிக் குடும்பத்தை நடத்துவேன் என மனைவி கவலையடைகிறாள். முதலாளிகள், தொழிலாளிகளின் கோரிக்கைகளை எவ்விதம் நிறைவேற்ற இயலுமெனக் கவலைப்படுகின்றனர்; குறைந்த சம்பளம் வாங்கும் ஒரு நபர் மாதத்தை எப்படி முடிப்போமோவென கவலை கொள்கின்றனர். வருவாய்க்கு மிஞ்சி செலவு செய்பவர்கள் கடனுக்குட்பட்டு, கடனைத் தீர்க்க வழியில்லையே எனக் கவலைப்பட்டுக் கலங்குகின்றனர். நாட்டில் நடக்கும் பலவித கலவரங்களையும், அநியாயச் செயல்களையுங் கண்டு, நாட்டை ஆளுகின்றவர்களும் கவலைப்படுகின்றனர். இவ்விதம் பணக்காரர், ஏழைகள் பெரியோர், சிறியோர் யாவருமே ஏதாகிலும் ஒரு கவலையினால் பாதிக்கப்படுகின்றனர்.

கவலையும் ஒரு கொடிய வியாதியைப் போன்று மனிதனது சரீரத்தைப் பாதிக்கின்றது. மட்டுக்குமிஞ்சி கவலைப்படுகின்றோரில் சிலர் புத்தி சுயாதீனத்தையும் இழந்துவிடுகின்றனர். தங்கள் கவலைக்குத் தீர்வு காணாமல் மனந்தளர்ந்து போன சிலர் தற்கொலையையும் செய்ய முடிவெடுக்கின்றனர். கவலை அழுத்தும் போது நித்திரைவராமல், தவிக்கும் நிலையில் கவலையை மறக்க தூக்கமாத்திரையை உபயோகப்படுத்துகின்றனர்.

மனிதன் முக்கியமாய்க் கவலைப்பட வேண்டிய தொன்றுண்டு. அதைக் குறித்தோ அநேகர் கவலைப்படாது வாழ்கின்றனர். பாவத்தில் உழன்று கிடக்கும் மனிதன், தனது பாவ வாழ்க்கையையும், மரணத்தையும், மரணத்திற்குப்பின் தேவனால் தனக்குக் கிடைக்கப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் மனிதன் கவலைப்படுவதேயில்லை. இப்படிப்பட்ட மக்களை கவலையினின்று மீட்டு இரட்சிக்கவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகில் அவதரித்து, நமது பாவங்களைத் தமது சரீரத்தில் சுமந்து, சிலுவையில் மரித்துப்பின் உயிர்த்தெழுந்து, தம்மிடம் வரும் யாவர்க்கும் பாவ மன்னிப்பையும், இரட்சிப்பையும் இலவசமாய் அருளி, முடிவில் மோட்சானந்த பாக்கியத்தையும் அருள ஆயத்தமாயிருக்கிறார். நீர் விரும்பினால் உமக்குப் பாவத்தைக் குறித்தும், நித்தியத்தை குறித்தும் கவலை இருக்குமானால், இன்றே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உமது சொந்த, தெய்வ இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவர் அருளும் பாவ மன்னிப்பையும், சந்தோஷ சமாதானத்தையும் பெற்றுத் தேவனுடைய பிள்ளையாக மாறுவீராக.

தேவனுடைய பிள்ளைகளுக்குக் கவலைகள் ஏற்படுமாயின் அதை நிவிர்த்தி செய்து கொள்ள கிறிஸ்தவத் திருமறையில் நல்ல அறிவுரைகள் உள்ளன. "அவர் (இயேசு) உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" (1 பேதுரு 5 : 7). இயேசுகிறிஸ்து நமது பாவங்களையும், துக்கங்களையும் (கவலைகளையும்) வியாதிகளையும் சிலுவையில் சுமந்ததால் இப்படிப்பட்டவைகள் நேரும்போது, பிள்ளை தகப்பனிடம் கேட்பது போல, இயேசுகிறிஸ்துவிடம் உங்கள் தேவைகளை

**இயேசு உன்னில் அன்பு கூறுகிறார்:- இறைமைந்தன் இயேசு இவ்வுலகினில் அவதரித்து வந்ததால் அவர் மூலமாக நாம் நித்திய ஜீவனைப் பெறுகிறோம்.**

1. அவருடைய அன்பு தெய்வக் குடும்பத்தில் நம்மை இணைக்கிறது. "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்". (யோ. 1:12).

2. அவர் அன்பு என்றுமே நிலைத்திருக்கும்:- "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை" (யோவான் 10:28).

இறைமைந்தன் இயேசு நமக்கு நித்திய ஜீவனை அருளுகின்றார். (1யோவான் 5:11).

இயேசு உன்னில் அன்பு கூறுகின்றார்:- ஆயினும் நம்முடைய பாவம் அதற்கு ஒரு பிரச்சனையாக உள்ளது. "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோ 4:10).

## பாவம் என்றால்

1. தெய்வ பயமும்; தெய்வ பக்தியும் இல்லாமை:- "தேவன் என்று அறிந்தும் அவரை மகிமைப்படுத்தாமலிருப்பது" ரோமர் 1:21 அதாவது உமது வாழ்க்கையில் தேவனுக்கு இடங்கொடாததேயாகும்.

2. நியாமற்ற வாழ்க்கை:- நீதியற்ற பாவ வாழ்க்கைத், தேவனுக்கு அருவருப்பானது. அவையாவன:- பாவ இச்சை, பொய்ப் பேசுதல், பேராசை, பொறாமைக் கொள்தல், பிறரில் அன்பு கூறாமை, தன்னயம், தற்புகழை நாடுதல் போன்றவைகளாகும்.

3. நம்பிக்கையில்லாமை:- இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசமும் நம்பிக்கையில்லாமையுமே பாவமாகும். "அவரை (இயேசுவை) விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" (யோவான் 3:18).

கிறிஸ்து நம்மேல் அன்பு வைத்ததால், அவர் தமது ஜீவனை நமது பாவங்களுக்காகச் சிலுவையிலே தியாகஞ் செய்தார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8).

இயேசு உம்மேல் அன்பாயிருப்பதால் உமக்கு நித்திய ஜீவனை அருள விரும்புகிறார். "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது" (1 யோவான் 4:9).

யார் யார் இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்கள் மீது அன்பு கூர்ந்து அவர்களுக்கு நித்திய ஜீவனை அருளுகிறார். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவர் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16).

இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதென்றால், அவரை இரட்சகராகவும், ஆட்கொள்ளும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ள நம்முடைய இதயந்தனில் இடமளிப்பதேயாகும்.

**கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, மரித்தோரிலிருந்து உயிருடன் எழுந்தார் என்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.**